சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.107/2021</u>

25.09.2025

வா.சா.3 திருமதி. கலா, க/பெ. பூமிநாதன்

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு திருமணம் 1997 ல் நடந்தது. 1997 லிருந்து எனது கணவருடன் மதுரையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1996 ஆம் வருடம் 2 ஆம் பிரதிவாதி கற்பகவள்ளி புருனே நாட்டில் இருந்தார் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு முன்னர் நானும் 2 ஆம் பிரதிவாதிக்கு உதவி செய்வதற்காக புருனே சென்றேன் என்றால் சரிதான். புருனே சென்று திரும்பிய பின்னிட்டு 1 மாதம் வசித்தேன் என்றால் சரிதான் பின்னர் என் அப்பா வீட்டிற்கு வந்துவிட்டேன். என் பாஸ்போர்ட் என்னிடம் உள்ளதா என்றால் அன்பழகனிடம் உள்ளது. நான் போலி பாஸ்போர்ட்டில் புருனே சென்றேன் என்றாலும் அதனால் தற்போது பாஸ்போர்ட் என்னிடம் இல்லை என சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் பூமிநாதன் மீது குற்ற வழக்கு இருந்தது என்றால் சரிதான். தற்போது வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுவிட்டார். எனது கணவரும் நானும் தேர்தலில் நின்ற போது டி.என்.09 எச் 9151 என்ற காரை பயன்படுத்தினேன் என்றால் சரிதான். தற்போது அந்த காரை நான் வாங்கிவிட்டேன். தாவா சொத்துக்களை அசோகன் வாங்கினார். அசோகன் சொத்துக்களை வாங்குவதற்காக பணத்தை என்னிடம் கொடுத்தார், நான் என் தகப்பனாரிடம் கொடுத்தேன். நான் தான் வீட்டு வரவு செலவுகளையும் பார்த்துவந்தேன். அசோகன் எந்த வருடத்திலிருந்து எந்த வருடம் வரை பணம் கொடுத்தார் என்பதற்கு வரவு செலவை அசோகனிடம் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 1986 ஆம் வருடத்திருலிருந்து 1989 ஆம் வருடம் வரை அசோகன் என்னிடம் சம்பளத்தை கொடுத்துவந்தார். பணத்தை நேரடியாக கையில் தான் கொடுப்பார். அசோகன் மொத்தமாக எவ்வளவு கொடுத்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. அசோகன் என்னிடம் கொடுத்த பணத்திற்கு நான் கணக்கு வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். சொத்துக்கள் எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் அசோகன் சொல்லி எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டது. கிரய சாசனம் எழுதும்போது அசோகன் உடனிருந்தாரா என்றால்

அசோகன் தான் என் தகப்பனாரை அழைத்து சென்று கிரய சாசனம் எழுதினார். கிரய ஆவணங்களில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் இல்லை. கிரய பத்திரங்களில் பக்கிரிசாமி நேரடியாக பணம் கொடுத்ததாக வாசகங்கள் உள்ளது என்றால் சரிதான். அன்பழகன் பெயரில் சொத்துக்களை என் தகப்பனார் 2013 ஆம் வருடம் எழுதிவைத்தார். பத்திரம் எழுதிய விவரம் எப்போது எனக்கு தெரியும் என்றால் பத்திரம் எழுதுவதற்கு முன்பே என் தகப்பனார் என்னிடம் சொல்லிவிட்டு தான் எழுதினார். என் தகப்பனார் சொல்லவேண்டாம் என்ற சொன்னதால் நான் சொல்லவில்லை. அன்பழகனுக்கு வருமானம் கம்மியாக இருந்ததால் அவர் தொழில் தொடங்க கேட்டார். பணம் இல்லை என்று சொன்னதால் சொத்துக்களை எழுதிக்கொடுத்ததை சொல்லவேண்டாம் என என் தகப்பனார் சொன்னார். அன்பழகனுக்கு சொத்துக்களை அசோகனிடம் சொன்னால் பிரச்னை வரும் என்பதால் என் தகப்பனார் சொல்லவேண்டாம் என சொன்னார். 3 வருடத்திற்குள் திருப்பி கொடுத்துவிடுவார் என்றும் சொன்னார். 3 வருடம் முடிந்த பின்னிட்டு திரும்ப கொடுக்கவில்லை. என்தகப்பனார் ஊரிலிருந்து ஆட்களை அழைத்து வந்து பேசினார். அப்போது அன்பழகன் குளத்தை அசோகன் வேலை பார்த்துக்கொடுத்தார். சொத்தை திரும்ப கொடுத்துவிடுவதாக பஞ்சாயத்தார் சொன்னார். அன்பழகன் எழுதிக்கொடுத்த ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் அசோகனிடம் உள்ளது. அன்பழகன் எப்போது பஞ்சாயத்தார் முன்னிலையில் எழுதிக்கொடுத்தார் என்றால் 12 வருடங்களுக்கு முன்பு எழுதிக்கொடுத்தார். என் தகப்பனார் 05.05.2019 ல் இறந்தார். எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரை அன்பழகன் பெயரில் எழுதிவைத்த சொத்துக்களை திரும்ப கொடுக்காததால் நடவடிக்கை எடுத்தாரா என்றால் அசோகன் சொத்தை அன்பழகனுக்கு எழுதிக்கொடுத்துவிட்டேன் புகார் கொடுக்க எனக்கு விருப்பமில்லை பஞ்சாயத்து பேசிக்கொள்ளலாம் என என்தகப்பனார் சொன்னார். இந்த விவரம் அசோகனுக்கு தெரியும் என்றால் தெரியும் அசோகன் முன்னிலையில் தான் பேசப்பட்டது. அசோகன் என் தகப்பனார் மீது அன்பழகன் மீதும் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு வேறு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை அசோகன் தாக்கல் செய்த பிராதில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. முதல்விசாரணையில் சொன்ன விவரங்களை அசோகன் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் தான் சொன்னேன். நான்

முதல்விசாரணையில் சொல்லியுள்ள விவரங்களை அசோகன் பிராதில் தெரிவிக்க விடுபட்ட எழுத்துக்களை பூர்த்தி செய்யும் வகையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக நம்பிக்கையின் அடிப்படையில் என் தகப்பனார் பெயரில் கிரயம் வாங்கப்பட்டதாக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்பழகன் சென்னையில் ஆடைகளை எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் மேலாளராக வேலை பார்த்தார் என்றால் உதவி மேலாளராக இருந்தார். அன்பழகன் வேலை பார்த்த போது கொட்டாம்பட்டியில் துணிக்கடை ஆரம்பித்தார் என்றால் இல்லை. நான்தான் ரூ.31,00,000/- செலவு செய்து கடை ஆரம்பித்தேன். தற்போது நான் ஆரம்பித்ததாக சொல்லும் கடை நஷ்டத்தில் போனதால் மூடிவிட்டோமா என்றால் இல்லை. அன்பழகன் எங்களுக்கு தெரியாமல் மிஷினை விற்பனை செய்துவிட்டதால் மூடிவிட்டோம். கொட்டாம்பட்டியில் வியாபாரம் அன்பழகனால் ஆரம்பிக்கப்பட்டது என்றாலும் நானும் என் கணவரும் மோசடி செய்ததால் நஷ்டம் ஏற்பட்டு வியாபாரம் மூடப்பட்டது என்றால் சரியல்ல. அசோகன் குடும்பத்திற்காக அனைத்து செலவுகளையும் செய்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது 1 ஆம் பிரதிவாதியின் மீதுள்ள விரோதத்தின் காரணமாக வாதியுடன் சேர்ந்து கொண்டு வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.